மேல்விஷாரம்நகராட்சி.
நாள்.08 .03.2024

அவசரக்கூட்டம்,

மேல்விஷாரம் நகராட்சியில் அவசரக்கூட்டம் நகராட்சி அலுவலகத்தில் நகரமன்றத் தலைவர் அவர்களின் தலைமையில் 11.03.2024ந் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் நடைபெற உள்ளது.

ஒம்/– எஸ்.டி.அமீன்,
நகரமன்றதலைவர்,
மேல்விஷாரம்நகராட்சி

பொருள்.

1. மேல்விஷாரம் நகராட்சியின் 2024–2025 முதல் 2026–2027ஆம் ஆண்டு வரை மூன்று ஆண்டு காலத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்த அறிக்கையின்படி 15.02.2024. 22.02.2024 மற்றும் 28.02.2024ந் தேதியில் கீழ் குறிப்பிட்டுள்ள இனத்திற்கு பொது ஏலம் நடத்தப்பட்டது. ஏலத்திற்கான வைப்பு தொகையினை எவரும் செலுத்த முன்வராத காரணத்தினால் 06.03.2024ந் தேதியன்று மீண்டும் மறுபொது ஏலம் விடப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எண். | குத்தகைஇனம் | சென்றஆண்டின்ஏலத்தொகை | மூன்றுஆண்டின்சராசரிஏலத்தொகை | உயர்த்தபட்சஏலத்தொகை | ஏலத்தில்கலந்துகொண்டவர்களின் விவரம் |
|---|---|---|---|---|---|
| 1 | மேல்விஷாரம் நகர பகுதியில் ஆடுஅறுக்கும் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | ரூ 75797/– | ரூ.72245/– | ரூ.80,100/– | திரு.ஐ.அப்துல் ஹக்கீம் 2/398, எம்.ஜி.ஆர். தெரு, தென்நந்தியாலம் |
| | | | | ரூ.80000/– | திருமதி.கி.விஜயா, (M/s.Victory Constructions) 781/3, சாலை தெரு, ஆயிலம் கிராமம். |

அலுவலககுறிப்பு :
மேல்விஷாரம் நகர பகுதியில் ஆடு அறுக்கும் சுங்கம் வசூலிக்கும் உரிமம் மூன்று ஆண்டுகளின் சராசரி தொகையைவிட கூடுதலாகவும், சென்ற ஆண்டைவிட கூடுதலாக ஏலம் கோரியுள்ளதாலும், உயர்ந்தபட்சம் ஏலக் கோரியுள்ள திரு.ஐ.அப்துல் ஹக்கீம் என்பவரின் ஏலத் தொகை ரூ. 80,100/–ஐ மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.1301/2018/அ1)
தீர்மானம் எண்.382, நாள்.09.03.2024
அனுமதிக்கப்பட்டது.

2. மேல்விஷாரம் நகராட்சியின் 2024–2025 முதல் 2026–2027ஆம் ஆண்டு வரை மூன்று ஆண்டு காலத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்த அறிக்கையின்படி 15,02,2024, 22.02.2024 மற்றும் 28.02.2024ந் தேதியில் கீழ்குறிப்பிட்டுள்ள இனத்திற்கு பொதுஏலம் நடத்தப்பட்டது. ஏலத்திற்கான வைப்பு தொகையினை எவரும் செலுத்த முன்வராத காரணத்தினால் 06.03.2024ந் தேதியன்று மீண்டும் மறுபொது ஏலம்விடப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எண். | குத்தகை இனம் | சென்ற ஆண்டின் ஏலத்தொகை | மூன்று ஆண்டின் சராசரி ஏலத்தொகை | உயர்த்த பட்சஏலத் தொகை | ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் விவரம் |
|---|---|---|---|---|---|
| 1 | மேல்விஷாரம் நகர பகுதியில் தினசரி நாளங்காடிகளில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | ரூ4,76,280/– | ரூ.4,53,960/– | ரூ.500,100/– | திரு.ஐ.அப்துல் ஹக்கீம் 2/398, எம்.ஜி.ஆர். தெரு, தென்நந்தியாலம் |
| | | | | ரூ.4,99,500/– | திருமதி.கி.விஜயா, (M/s.Victory Constructions) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | 781/3, சாலைதெரு, ஆயிலம்கிராமம். |

அலுவலககுறிப்பு :

மேல்விஷாரம் நகர பகுதியில் தினசரிநாளங்காடிகளில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் மூன்று ஆண்டுகளின் சராசரி தொகையைவிட கூடுதலாகவும், சென்ற ஆண்டைவிட கூடுதலாக ஏலம்கோரியுள்ளதாலும், உயர்ந்த பட்சம்ஏலக் கோரியுள்ள திரு.ஐ.அப்துல்ஹக்கீம் என்பவரின் ஏலத் தொகைரூ. 5,00,100/-ஐ மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1301/2018/அ1)

தீர்மானம் எண்.383, நாள்.09.03.2024

அனுமதிக்கப்பட்டது.

3. இந்நகராட்சியில் 21 வார்டுகள் 8.96 Sqkm பரப்பளவு தற்பொழுது 55000 எண்கள்கொண்ட மக்கள் தொகை உள்ளனர் இந்நகரத்திற்கு ஈஸ்வரன் கோவில் மற்றும் நந்தியாளம் என இரண்டு தலைமை நீரேற்று நிலையம் உள்ளது. ஆற்றுப்படுக்கையில் ஆறு எண்கள் நீர்உறிஞ்சும் கிணறு மற்றும் நான்கு எண்கள் உரைகிணறு கொண்டு குடிநீர் எடுக்கப்பட்டு தலைமை நீரேற்றும் நிலையத்தில் சேகரிக்கப்பட்டு 42 km கொண்ட பகிர்மான குழாய் மூலம் பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதில் பொறியியல் பிரிவில் குடிநீர் பணியைமேற்கொள்ள போதுமான ஆட்கள் இல்லாத்தாலும் மேலும் தற்பொழுது வறட்சிகாலம் என்பதால் குடிநீர் பணிகள் தொய்வின்றி நடைபெற வேண்டும் என்பதால் மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் 15 நபர்கள் நான்கு மாதத்திற்கு குடிநீர் பணிகள் சுய உதவிக்குழுக்கள் மூலமாக மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.6.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) 2024-2025ம் ஆண்டு வரவுசெலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர்நிதியிலிருந்து செலவினத்தை மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

3) பாராளுமனற் தேர்தல் நடத்தை விதி (Model Code of Conduct) அடுத்த வாரம் அமுலுக்கு வரும் வாய்ப்புள்ள நிலையில், இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர இயலாது என்பதால், குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதி சுயஉதவிக்குழு பணியாளர்களைக் கொண்டு குடிநீர் விநியோகப் பணியினை மார்ச், ஏப்ரல், மே, ஜீன் 2024 ஆகிய நான்கு மாதங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர், இராணிப்பேட்டை அவர்களால் நிர்ணயிக்கப்பட்டுள்ள Unskilled labour-க்கான தினக்கூலி ரூ.380/- அடிப்படையில் 15 பணியாளர்களை அமர்த்திக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.450/2023/இ1)

தீர்மானம் எண்.384, நாள்.09.03.2024

ஜனவரி, பிப்ரவரி மாதம் விடுபட்டுள்ளதால் அதையும் சேர்த்து கூலி வழங்க மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது. கூடுதலாக ஏற்படும் ரூபாய் 3.20 இலட்சம் (மூன்று லட்சத்து இருபதாயிரம் மட்டும்) அனுமதிக்கலாம்.

4. இந்நகராட்சியின் 2023-2024 ஆம் நிதி ஆண்டிற்கான திருத்திய வரவு-செலவு (Revised Budget) நிதிநிலை அறிக்கை மற்றும் 2024-2025ஆம் நிதி ஆண்டிற்கான வரவு-செலவு (Budget) அறிக்கையினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.284/2020/சி1)

தீர்மானம் எண்.385, நாள்.09.03.2024

அனுமதிக்கப்பட்டது.

ஒம்/- எஸ்.டி.அமீன்,
நகரமன்றதலைவர்,
மேல்விஷாரம்நகராட்சி